செய்தி வெளியீடு எண்:623 நாள்:27.12.2016

# கலை பண்பாட்டுத்துறை

# தமிழ்நாடு ஜவகர் சிறுவர் மன்றம்

அகில இந்திய அளவில் மேடைக்கலை (Creative Performance) படைப்புக் கலை (Creative Art), அறிவியற்கலை (Creative Innovative Science), எழுத்துக்கலை (Creative Writing) ஆகியவற்றில், 16 வகையான உட்பிரிவுகளில் புதுமைகள் படைத்திடும் 10 முதல் 16 வயதிற்குட்பட்ட குழந்தைகளை ஆண்டு தோறும் தெரிவு செய்து தேசிய இளந்திரு விருது **(National Bal Shree Award)** எனும் உயரிய விருது மத்திய அரசின் மனிதவள மேம்பாட்டுத்துறையின் கீழ் செயல்படும் தேசிய சிறுவர் மன்றத்தால் (National Bal Bhavan) வழங்கப்பட்டு வருகிறது.

தமிழக அரசின் கலை பண்பாட்டுத் துறையின் அங்கமாகத் திகழும் தமிழ்நாடு ஜவகர் சிறுவர் மன்றத்தின் வாயிலாக, புதுமைகள் படைத்திடும் சிறந்த குழந்தைகளை தெரிவு செய்து, புதுதில்லி தேசிய சிறுவர் மன்றத்தால் (National Bal Bhavan) நடத்தப்படும் தேசிய பாலஸ்ரீ விருதிற்கான போட்டிகளுக்கு (National Bal Shree Award) மாணவர்களை ஆண்டுதோறும் அனுப்பி வருகிறது.

இவ்விருதுக்கான தெரிவுகள் முதலில் மாவட்ட அளவிலும், அதில் தெரிவு செய்யப்படுவோர் மாநில அளவிலும், அதில் தெரிவு செய்யப்படுவோர் தேசிய அளவில் நடைபெறும் போட்டிகளிலிருந்து தெரிவு செய்யப்படுவர். 2000 ஆம் ஆண்டு முதல் 2014 வரை தமிழ்நாடு ஜவகர் சிறுவர் மன்றம் வழியாக 41 மாணவர்கள் இவ்விருதினைப் பெற்றுள்ளனர். 2015 ஆம் ஆண்டில் தமிழக அளவில் தெரிவு செய்யப்பட்ட 61 மாணவர்கள் புதுதில்லியில் நடைபெற்ற தேசிய அளவில் போட்டியில் கலந்து கொண்டனர்.

அகில இந்திய அளவில் 520 மாணவர்கள் கலந்து கொண்ட இப்போட்டியில், 82 மாணவர்கள் விருதிற்காக தெரிவு பெற்றுள்ளனர். இந்த 82 மாணவர்களில் தமிழகத்தினை சேர்ந்த 17 மாணவ, மாணவியர்கள் 2015 ஆம் ஆண்டிற்கான தேசிய பாலஸ்ரீ விருது **(National Bal Shree Award)** பெற்றுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. விருது பெற்ற தமிழகத்தினைச் சார்ந்த 17 மாணவ, மாணவியர்களின் விவரம் பின்வருமாறு,

2015 ஆம் ஆண்டிற்கான தேசிய பாலஸ்ரீ விருது பெற்றவர்கள்

| வ. எண் | பெயர் | கலை | வயது வகை | இடம் |
|---|---|---|---|---|
| 1 | செல்வி ஜி.நிகிதா | படைப்புக்கலை (ஓவியம்) | 10–12 | சென்னை |
| 2 | செல்வன் எஸ்.திருவேங்கடம் | மேடைக்கலை (தாளவாத்தியம் –கருவியிசை – மிருதங்கம்) | 10–12 | கடலூர் |
| 3 | செல்வி எம்.சுருதி | மேடைக்கலை (குரலிசை) | 10–12 | வேலூர் |
| 4 | செல்வி எஸ்.பி.மதுரிதா | அறிவியல் கலை ( அறிவியல் புதிர்களுக்கு தீர்வு காணுதல்) | 10–12 | நாமக்கல் |
| 5 | செல்வி ஏ.ஆர்.மோனிஷா | எழுத்துக்கலை (கட்டுரை) | 10–12 | கன்னியாகுமரி |
| 6 | செல்வன் ஆர்.எஸ்.கிரிஸ்வர் | அறிவியல் கலை (அறிவியல் மாதிரி உருவாக்குதல்) | 12–14 | தஞ்சாவூர் |
| 7 | செல்வி வி.ஐஸ்வர்யா (மாற்று திறனாளி) | மேடைக்கலை (நடனம்) | 12–14 | சென்னை |
| 8 | செல்வி எஸ். தேவிஸ்ரீ | படைப்புக்கலை (கைவினை) | 14–16 | சேலம் |
| 9 | செல்வி என்.சஞ்யுக்தா | படைப்புக்கலை (கைவினை) | 14–16 | கரூர் |
| 10 | செல்வன் என்.சீனிவாசன் | படைப்புக்கலை (கணினி வரைகலை) | 14–16 | சென்னை |
| 11 | செல்வி ஜி.வி.தர்ஷிணி | மேடைக்கலை (நடனம்) | 14–16 | காஞ்சிபுரம் |
| 12 | செல்வன் எஸ். சங்கர பிரசாத் | மேடைக்கலை (தாளவாத்தியம்– கருவியிசை –மிருதங்கம்) | 14–16 | சென்னை |
| 13 | செல்வன் கே.ஸ்ரீகாந்த் | மேடைக்கலை (தாளவாத்தியம் கருவியிசை – தவில்) | 14–16 | ஈரோடு |
| 14 | செல்வன் வி.சஞ்ஜீவி | அறிவியல் கலை ( அறிவியல் மாதிரி உருவாக்குதல்) | 14–16 | நீலகிரி |
| 15 | செல்வன் எஸ். அபிஷேக் | அறிவியல் கலை ( அறிவியல் புதிர்களுக்கு தீர்வு காணுதல்) | 14–16 | சென்னை |
| 16 | செல்வி அக்ஷயா மோகன் | எழுத்துக்கலை (கதை) | 14–16 | சென்னை |
| 17 | செல்வி கே.எஸ். ஜனனி | எழுத்துக்கலை (கட்டுரை) | 14–16 | கோயம்புத்தூர் |

தேசிய பாலஸ்ரீ விருதுக்காக தெரிவு செய்யப்பட்ட தமிழகத்தினை சேர்ந்த மேற்காணும் 17 மாணவ, மாணவியர்களுக்கு மைய அரசின் மாண்புமிகு மனிதவள மேம்பாட்டுத்துறை அமைச்சர் அவர்களால் இவ்விருதுகள் புதுதில்லியில் விரைவில் வழங்கப்பட உள்ளது.

இவ்விருது பெறும் மாணவ, மாணவியர்களுக்கு விருதுடன் ரூ.15,000/– மதிப்புள்ள கிசான் விகாஸ் பத்திரம், நினைவுப்பரிசு, சான்றிதழ் ஆகியவை வழங்கப்படும். தேசிய பாலஸ்ரீ விருது பெற்ற மாணவர்களுக்கு தமிழக அரசும் தலா ரூ.10,000/– வீதம் ஊக்கப்பரிசு மற்றும் பாராட்டு சான்றிதழ் வழங்கி சிறப்பிக்கும்.

**வெளியீடு: – இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை**